இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்.

ப.மு.எண்.004410/அ1/2021 நாள். .01.2022. 000085

பொருள்:- தமிழ்நாடு - அமைச்சுப்பணி - இராணிப்பேட்டை மாவட்டம் பெரும்புலிபாக்கம், அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. ர. டேவிட்குமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை:-
1. அரசாணை எண்.101, பள்ளிக்கல்வி துறை நாள்.18.05.2018.
2. இராணிப்பேட்டை, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.788/அ1/2020 நாள்.17.09.2020.
3. அரக்கோணம், மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2795/அ1/2021 நாள். 15.12.2021.

#####

இராணிப்பேட்டை மாவட்டம் பெரும்புலிபாக்கம், அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. ர. டேவிட்குமார் என்பாருக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு 21.09.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருவதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எ. | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகத்தின் பெயர் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை படுத்திய நாள் |
|---|---|---|---|
| 01. | திரு. ர. டேவிட்குமார், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, பெரும்புலிபாக்கம். | 21.09.2020 முற்பகல் | 21.09.2020 முற்பகல் |

பணிவரன்முறை படுத்தப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பணி முடித்து துறைத் தேர்வுகள் மற்றும் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சி முடித்து தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யவேண்டுமென்று ஆணையிடப்படுகிறது. மேலும் தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணை வழங்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படும்.

மேற்காண் பொருள் சார்ந்து அன்னாரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு- பணிப்பதிவேடு.

முதன்மைக்கல்வி அலுவலர்,
இராணிப்பேட்டை 632 401.

பெறுநர்

சம்பந்தப்பட்டவருக்கு (உரிய வழியாக)

நகல்- மாவட்டக் கல்வி அலுவலர், அரக்கோணம்.

நகல்- பள்ளிக்கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.